Arts College for Madurai.

* 88 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether it has been proposed to establish an Arts College at Madurai in 1968–69 academic year on behalf of the Wakf Board;

(b) the financial status of the Wakf Board; and

(c) whether people belonging to different religions can join this College?

மதுரையில் கலைக்கல்லூரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) 1968-69 கல்வியாண்டில் மதுரையில் வக்ப் போர்டு சார்பில் ஒரு கலைக் கல்லூரி திறக்கப்படவிருக்கிறதா ?

(இ) வக்ப் போர்டின் நிதி நிலையென்ன?

(உ) இந்த கல்லூரியில் யாரும் சேர்ந்து படிக்கலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா . (அ) ஆம்.

(இ) 14-6-1968 அன்று உள்ளபடி மாநில வக்ஃப் வாரியச் சொத்துக்களின் மதிப்பு ரூ. 11,22,444.16. பொறுப்புகளின் மதிப்பு ரூ. 8,27,632.29. எனவே பொறுப்புக்களுக்கு மேல் சொத்துக்கள் ரூ. 2,94,211 87 உபரியாக உள்ளன.

(உ) ஆம்.

Tambaram–Madras High Road

* 89 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon the Minister for Public Works be pleased to state :

(a) whether the Government are aware of the appearance of new huts adjoining the road on both sides of the Highway from Madras City to Tambaram; and

(b) if so, the action taken thereon?

தாம்பரம் நெடுஞ்சாலையை நெருக்கி புதுக்குடிசைகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரிலிருந்து தாம்பரம் வரை நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் சாலையை நெருக்கி புதுக்குடிசைகள் தோன்றியுள்ளதை சர்க்கார் அறியுமா ?

(இ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?